www.malankaralibrary.com

# தூய இறையன்னையோடு செபமாலை

எல்லா நன்மைகளும் நிறைந்த அன்பு இறைவா! பொல்லாத மனிதரும் நன்றி மறந்த பாவிகளுமாயிருக்கிற அடியோர்கள் அளவில்லாத மகிமையை கொண்டிருக்கிற இறைவனாகிய உமது முன்னிலையில் ஜெபிக்க தகுதியற்றவர்களாயிருந்தாலும் உம்முடைய அளவில்லாத இரக்கத்தை நம்பிக்கொண்டு உம்மை போற்றிப் புகழவும், தூய இறை அன்னையை புகழவும் ஐம்பத்து மூன்று மணி செபம் செய்ய ஆசைப்படுகிறோம். இந்த செபத்தை பக்தியுடன் செபித்து வீண் சிந்தனைகளை தவிர்த்து ஒப்புக்கொடுக்க உமது உதவியைத் தந்தருளும். ஆமென்.

**திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கை**

விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகிறேன். அவருடைய ஒரே மகனாகிய இயேசு கிறிஸ்துவையும் நம்புகிறேன்.

இவர் தூய ஆவியாரால் கருவுற்று தூய கன்னி மரியாவிடமிருந்து பிறந்தார். பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டு சிலுவையில் அறையப்பட்டு இறந்து அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். விண்ணகம் சென்று எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார்.

அவ்விடமிருந்து வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பு வழங்க மீண்டும் வருவார். தூய ஆவியாரை நம்புகிறேன். தூய கத்தோலிக்கத் திருச்சபையையும் புனிதர்களுடைய சமூக உறவையும் நம்புகிறேன். பாவ மன்னிப்பை நம்புகிறேன். உடலின் உயிர்ப்பை நம்புகிறேன். நிலைவாழ்வை நம்புகிறேன். ஆமென்.

| |
|---|
| பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராஜியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக.<br>எங்களுக்கு வேண்டிய அப்பத்தை இன்று எங்களுக்குத் தந்தருளும். எங்கள் கடன் காரர்களுக்கு நாங்கள் மன்னித்தது போல, எங்கள் கடன்களையும் பாவங்களையும் மன்னித்தருளும். எங்களைச் சோதனையில் புகவிடாதேயும். தீயோனிடமிருந்து எங்களை இரட்சித்தருளும். ஏனெனில் இராஜியமும் வல்லமையும் மகிமையும் என்றென்றும் உம்முடையனவே. ஆமென். |
| அருள் நிறைந்த மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீரே; உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசிர்வதிக்கப்பட்டவரே.<br>தூயமரியே, இறையன்னையே பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிகொள்ளும். ஆமென். |

1 பரலோகத்தில் இருக்கிற...

www.malankaralibrary.com

தந்தையாகிய இறைவனுக்கு மகளாய் இருக்கிற புனித இறை அன்னையே! எங்களில் இறைவிசுவாசம் என்னும் அருட்கொடை பலன் அளிக்க உமது திருமகனை மன்றாடும்.

1 அருள்....

மகனாகிய இறைவனுக்குத் தாயாகிய புனித இறை அன்னையே எங்களில் நம்பிக்கை என்னும் அருட்கொடை வளரும்படி உமது திருமகனை மன்றாடும்.

1 அருள்....

தூய ஆவியாகிய இறைவனுக்கு மிகவும் அன்புக் குரியவளாய் இருக்கும் புனித இறை அன்னையே! எங்களில் இறை அன்பு என்னும் அருட்கொடை வலுபெற்று வளர்ந்திட உம்முடைய திருமகனை மன்றாடும்.

1 அருள்...

தந்தை, மகன், தூய ஆவிக்கு மகிமை உண்டாவதாக. ஆதி முதல் என்றென்றைக்கும். ஆமென்.

(ஒவ்வொரு மறைபொருளுக்குப்பின்)

ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னித்தருளும். நரகத்தீயிலிருந்து எங்களைக் காத்தருளும். எல்லா ஆன்மாக்களையும் வாழ்வின் பாதையில் நடத்தியருளும். சிறப்பாக உமது இரக்கம் யாருக்கு அதிகத் தேவையோ அவர்களையும் விண்ணகத்தில் சேர்த்தருளும். செபமாலையின் அரசியே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**ஒளியின் மறைபொருள்கள்**

1. இயேசு யோர்தானில் திருமுழுக்கு பெற்றதை தியானிப்போமாக

1 பரலோ ..... 10 அருள் ..... 1 தந்தை ..

Melody: ஆண்டவரே அருள் செய்தருளும்............................... மாலை செபம்

அருள் நிறை மரியே வாழியவே
ஆண்டவர் என்றும் உம்முடனே
பெண்களுள் ஆசி பெற்றவரே
உம் மகன் இயேசுவும் வாழியவே

தூய மரியே இறை-யன்னையே
பாவிகளாம் எங்கட்காக
இப்பொழுதும் எப்பொழுதும்
மரண நேரமும் வேண்டுமம்மா.

2 கானாவூர் திருமண வீட்டில் தண்ணீரை திராட்சை இரசமாக்கியதை தியானிப்போமாக.

1 பரலோ .... 10 அருள் ..... 1 தந்தை ....

3. இறையரசு அறிவிக்கப்பட்டதை தியானிப்போமாக

1 பரலோ ..... 10 அருள் ..... 1 தந்தை ....

www.malankaralibrary.com

4. இயேசு மறு உருவடைந்ததை தியானிப்போமாக

1 பரலோ ..... 10 அருள் ..... 1 தந்தை ...

5. இயேசு நற்கருணையை ஏற்படுத்தியதை தியானிப்போமாக

1 பரலோ ..... 10 அருள் ..... 1 தந்தை ....

**ஒப்புக்கொடுத்தல் செபம்**

அதிதூதரான புனித மிக்கேலே, புனித கபிரியேலே, புனித இரபேலே, அப்போஸ்தலரான புனித இராயப்பரே, சின்னப்பரே, அருளப்பரே எங்கள் தந்தையான புனித தோமையாரே, நாங்கள் கொடிய பாவிகளாக இருந்தாலும் நாங்கள் வேண்டிக்கொண்ட இந்த ஐம்பத்து மூன்று மணி செபத்தையும் உங்கள் புகழோடு சேர்த்து புனித இறையன்னையின் திருப்பாதத்தில் காணிக்கையாக ஒப்புக்கொடுக்க உங்களை வேண்டிக்கொள்கிறோம்.

**புனித இறையன்னையின் புகழ்மாலை**

| |
|---|
| Melody: ஆண்டவரே அருள் செய்தருளும்................................ துக்க வெள்ளிப் பாடல்<br><br>ஆண்டவரே நீரிரங்கிடுவீர்<br>கிறிஸ்துவே நீரிரங்கிடுவீர்<br>ஆண்டவரே நீரிரங்கிடுவீர்<br>எங்கள் மன்றாட்டைக் கேளும்.<br>வானகத் தந்தையாம் இறைவா<br>உலகின் மீட்பர் மகனிறைவா<br>தூய ஆவியாம் இறைவா<br>தூய மூவோரிறையவனே<br>இறைவா கனிந்தருள்வீரென்மேல்<br>நாதா தயை செய்வீரன்பால் |
| சிலுவைக்கால காலை மன்றாட்டு ஆண்டவராம் வல்லவரே என்ற பாடலின் மெட்டு.<br><br>தூயவளாம் மரியாவே<br>இறையவரின் தாயாரே<br>கிறிஸ்துவின் தாயே<br>எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.<br>இறையருளின் அன்னையே<br>மகா புனித அன்னையே<br>நிலையாம் கற்பின் அன்னையே<br>எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்<br><br>குற்றமில்லா அன்னையே<br>கன்னிமை கெடாத அன்னையே<br>பேருய-ரன்பின் அன்னையே<br>எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்<br>விய-ப்புக்குரிய அன்னையே |

www.malankaralibrary.com

ஆலோசனை தரும் அன்னையே
மீட்டவரு-டைய அன்னையே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

உய-ரறிவின் கன்னிகையே
புகழ்ச்சிக்-குரிய கன்னிகையே
வல்லமையுள்ள கன்னிகையே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்
இரக்கமுள்ள கன்னிகையே
விசுவாசத்தின் கன்னிகையே
திருச்சபையினரின் கன்னிகையே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

தருமத்தின் கண்ணாடியே
ஞானத்தின் உறைவிடமே
எங்கள் மகிழ்வின் காரணமே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்
ஆன்மீகப் பாத்திரமே
மகி-மையின் பாத்திரமே
பயபக்தி-யின் பாத்திரமே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

மறைபொருளாம் ரோஜாவே
தாவீதின் அரண்மனையே
அழகுருவா-ம் அரண்மனையே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்
பொன்மயமான ஆலயமே
வாக்குறுதியின் பே-ழையே
விண்ணக-த்தின் வாசலே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்
விடியற்கால விண்மீனே
நோயுற்றோரின் ஆரோ-க்கியமே
பாவிகளுக்கு அடைக்கலமே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்
துன்புறுவோர்க் -காறுதலே
கிறிஸ்தவரின் சகாயமே
ஊரார்க்கெல்-லாம் சகாயமே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

விண்ணக தூதரின் அரசியே
மூதாதையரின் அரசியே
இறைவாக்கினரின் அரசியே

www.malankaralibrary.com

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்
திருத்தூதர்களின் அரசியே
மறைசாட்சிகளின் அரசியே
புகழ்ச்சிக்குரிய அரசியே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

கன்னியர்களின் அரசியே
புனிதர்களின் அரசியே
பிறப்பு பாவ-மற்ற அரசியே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்
விண்ணேற்பின் அரசியே
திரு ஜெபமாலை அரசியே
அமைதி-க்கெல்லாம் அரசியே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

எங்கள் பங்கின் அரசியே
குடும்பங்களின் அரசியே
இந்திய நாட்டின் அரசியே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

Melody: ஆண்டவரே அருள் செய்தருளும்............................ துக்க வெள்ளிப் பாடல்

பாவம் போக்கும் செம்மறியே
எங்கள் பாவங்களை மாய்ப்பீர்
எங்கள் மன்றாட்டை கேட்பீர்
எங்களை ஆசீர்வதி-த்திடுவீர்.

இறைவா கனிந்தருள்வீரென்மேல்
நாதா தயை செய்வீரன்பால்

இறைவனின் புனித அன்னையே. இதோ உம்மிடம் சரணமாக ஓடி வந்தோம். எங்கள் தேவைகளில் எங்கள் மன்றாட்டுக்களை புறக்கணியாதேயும். புனிதப்படுத்தப் பட்டவளும் பேறுடையவளுமாய் இருக்கிற கன்னிகையே, எல்லா ஆபத்துகளிலிருந்தும் எங்களை பாதுகாத்துக்கொள்ளும்.

இயேசுகிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதியுள்ளவர்களாகும்படி,

இறைவனின் புனித அன்னையே, எங்களுக்காக மன்றாடும்.

**செபிப்போமாக**

இறைவா, முழு உள்ளத்தோடு சரணடைகின்ற எங்களை (இந்த குடும்பத்தை) எப்பொழுதும் புனித கன்னிகையான மரியாளின் வேண்டுதலினால் எல்லா எதிரிகளிடமிருந்தும் மீட்டருளும். இந்த மன்றாட்டுக்களை எல்லாம் எங்கள்

www.malankaralibrary.com

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும். ஆமென்.

### விண்ணக அரசியே

விண்ணக அரசியே, அருளின் அன்னையே! வாழ்க! எங்கள் வாழ்வே, எங்கள் அடைக்கலமே, எங்கள் வாழ்வின் இனிமையே வாழ்க, வழிப்பயணிகளும் ஏவாளின் மக்களுமாகிய நாங்கள் கண்ணீரின் பள்ளத்தாக்காகிய இந்த உலகிலிருந்து உம்மை நோக்கி அழைக்கின்றோம். அழுது புலம்பி உம்மிடம் பெருமூச்சு விடுகின்றோம். ஆதலால் எங்களுக்காக பரிந்துரைக்கும் தாயே! உம்முடைய இரக்கமுள்ள திருக்கண்களை எங்கள் மேல் திருப்பியருளும். அருளும், அன்பும், இனிமையும் நிறைந்த கன்னிமரியே, உமது திரு உதரத்தின் கனியாகிய இயேசு கிறிஸ்துவை இவ்வுலக வாழ்விற்குப்பின் எங்களுக்கு நீர் காண்பித்தருளும்.

### செபிப்போமாக

எல்லாம் வல்லவரும் நிலையான வருமான இறைவா, புனித கன்னித்தாய் மரியாளின் ஆன்மாவும் உடலும் தூய ஆவியின் அருளினால் இறைவனின் திருமகனுக்கு ஏற்ற இல்லமாயிருக்க முன்னரே தீர்மானித்தீரே. அந்த திருத்தாயை நினைத்து மகிழும் நாங்கள் அவருடைய இரக்கம் நிறைந்த மன்றாட்டால் இம்மையில் எல்லாவித ஆபத்துகளிலிருந்தும், நித்திய இறப்பிலிருந்தும் மீட்கப்படுமாறு அருள்புரிந்தருளும். இந்த மன்றாட்டுக்களை எல்லாம் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வழியாக எங்களுக்குத் தந்தருளும்.

### புனித பெர்னர்து இறையன்னையை நோக்கி வேண்டிக்கொண்ட செபம்

இரக்கம் நிறைந்த அன்னையே, / நீரே தஞ்சமென உம்மை நாடி வந்து / உம் உதவியைக் கெஞ்சும் எவரையும் / நீர் புறக்கணித்ததாக / உலகில் கேள்விப் பட்டதேயில்லையென நினைத்தருளும். கன்னியரின் அரசியான கன்னிகையே, / இரக்கம் நிறைந்த அன்னையே / இத்தைகைய நம்பிக்கையால் தூண்டப் பட்டு / உம் திருவடிகளை / நெருங்கி வருகிறேன். பாவியாகிய நான் / பெருமூச்சு விட்டு / கண்ணீர் சிந்தி / உமது பரிவிரக்கத்தை எதிர்நோக்கி உம் முன்னிலையில் நிற்கின்றேன். மனுவுரு எடுத்த வார்த்தையின் அன்னையே, என் மன்றாட்டுக்களை புறக்கணியாமல் இரக்கமுடன் ஏற்றருள்வீராக. ஆமென்.

Youtube Link to hear as song

https://youtu.be/FqNJxSYSsV8

மஜா